புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

==================================================================

# ஐம்பெருங்காப்பியங்களில் கலை இலக்கியக் கூறுகள்

==================================================================

**ஆய்வாளர்**

***ர.ஜெயந்தி ,*** *முனைவர் பட்ட ஆய்வாளர்*

*தமிழ்த்துறை,*

*பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு*

*விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு – 638052*

**நெறியாளர்**

***முனைவர் இரா. மல்லிகா ,*** *உதவிப்பேராசிரியர்,*

*தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழக முதுகலை பட்ட மேற்படிப்பு*

*விரிவாக்க மற்றும் ஆராய்ச்சி மையம், பெருந்துறை, ஈரோடு – 638052*

==================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

*தமிழர்களின் பாரம்பரிய பண்பாட்டு மரபுகளில் ஒன்று கலை இலக்கியச் சிந்தனைகளாகும். கலை இலக்கிய கூறுகளானது அறத்தின் வழிப்பட்டதாகவும், அறத்தினை எக்காலத்திற்கும் நிலை நிறுத்தக்கூடியதாகவும் காணப்பட்டுள்ளன. இலக்கியங்கள் பன்னெடுங்காலமாக கலைகளில் வடிவக்கூறுகளைத் தாங்கியும் வாய்மொழி மரபுகளைக் கொண்டும் கலைத்திறன், கற்பனைத்திறன், அறிவுத்திறன் என்ற பன்முகத் திறன்களின் அடிப்படையில் கலை இலக்கியக் கூறுகள் ஐம்பெரும்காப்பியங்களில் படைக்கப்பட்டுள்ளன. ஐம்பெரும்காப்பியங்களில் பாடு பொருளானது இக்காலத்தின் தன்மைக்கு ஏற்பவும் காலச்சூழலுக்கு ஏற்பவும் பொருண்மையை வெளிக்கொணர்ந்தாலும் அவையனைத்திலும் கலை நுணுக்கத் திறன்களானது இயல்பாக கலந்தே பாடப்பட்டுள்ளன. சமூக வாழ்வியலின் கலைத்தன்மையையும் இலக்கியப் பொருண்மைக் கூறுகளின் கலைத்தன்மையையும் சிலப்பதிகாரம் முதலான காப்பியங்கள் பாடுபொருளின் நோக்கத் தன்மைக்கு ஏற்ப*

காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாட்டுப்புறக் கலைகள், கவின்கலைகள், வாய்மொழிக் கலைக்கூறுகள், இலக்கியக் கலைக்கூறுகள் என்றனைத்தையும் ஐம்பெரும்காப்பியங்களின் வழி ஆராய்ந்து எடுத்துரைப்பது இவ்வாய்வுக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**கலைச்சொற்கள்**

**மனிதம், மெய், ஆக்கச்செயல், எழுத்தியல், மெய்யியல், கலைவடிவம்**

**முன்னுரை**

தமிழர்களிடத்து தொன்றுதொட்டு வரக்கூடிய கலைச்சிந்தனையானது உலகளாவியது ஆகும். கணப்பொழுதுகளின் தொடர்ச்சியால் உருவாக்கப்பட்ட வாழ்க்கைதனில், வாழ்ந்ததற்கான அடையாளமானது புனிதமானதாக அமைதல் வேண்டும். மனிதம் மகிழ்ச்சியாவது எப்போது எனில் கலைச்சிந்தனையுடைய கலைஞர்களாக மனிதர்கள் மாறும்போது மட்டும்தான். வாழ்வியலைச் சிறப்புமிக்கதாகவும், பொருள் பொதிந்ததாகவும் மாற்றக்கூடியது கலைச்சிந்தனைகள் ஆகும். அத்தகைய கலைகளும், கலைச்சிந்தனைகளும் தமிழ் இலக்கியங்களில் நிறைந்து கிடக்கின்றது. பழந்தமிழ்ச் சான்றோர்ப் பெருமக்கள் கலைகளை உயிரெனக் கருதியது மட்டுமின்றி இலக்கியங்களாகவும் அறநுல்களாகவும் எழுதி கலைகளைப் போற்றிப் பாதுகாத்தும் வந்துள்ளனர். அத்தகு தமிழர்களின் உயிர்நாடியான கலைகளைப் பற்றியும் உலக கலைகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ள தமிழக கலைகளைப் பற்றியும் உலக கலைகளுக்கு அடித்தளமாக அமைந்துள்ள தமிழக கலைகள் பற்றி ''ஐம்பெருங்காப்பியங்களில் கலை இலக்கியக் கூறுகள்'' என்னும் தலைப்பில் ஆராய்ந்துரைத்து கலைகள் பற்றிய சிந்தனைகளையும், கலைகளின் வகைமை மற்றும் தன்மைகளை எடுத்துரைப்பது ஆகும்.

**ஐம்பெருங்காப்பியங்களில் கலைகளின் நிலை**

மனதின் கலைச் சிந்தனையால் தோன்றக் கூடியது எண்ணங்களாகும். பண்டையத் தமிழர்களிடத்து தோன்றிய எண்ணங்களானது உயர்ந்த எண்ணங்கள் ஆகும். முதிர்ந்த இலக்குகளையும், உயர்ந்தக் குறிக்கோள்களையும் உடைய கலைச் சிந்தனை உடையவர்களாகத் தமிழர்கள் காணப்பட்டதால், அவர்களால் படைக்கப்பட்ட கலைகளும் உயர்ந்தக் கருத்துக்களை எடுத்தியம்புவதாய் படைக்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் காப்பிய உலகில் சிறந்த கற்பனைகளுடன் உணர்ச்சிகளைக் கலந்து நீதியினை நிலைநாட்டிடும் வண்ணம் கலைகளை மையமிட்டு படைக்கப்பட்டுள்ளது ஐம்பெருங்காப்பியங்களாகும்.

ஐம்பெருங்காப்பியங்கள் அனைத்தும் வாழ்வியல் இலக்கணத்தையும் கலை நுணுக்கத்தையும் கொண்டு அமைந்துள்ள நூல்கள் ஆகும். ஐம்பெருங்காப்பியங்கள் பற்றி முனைவர் பெ.ஜெயமாரி அவர்கள் கூறுகையில்,

**காப்பியம் முழுவதும் காதலுறமும், வாழ்க்கை நலமும் பொழியப் பொழிய**

***பாடிய பாடல்கள் நிறைந்தும் மிகுந்தும் இருக்கின்றது'***

***(பெ.ஜெயமாரி, சீவகசிந்தாமணியில் அழகியல், ப.4)***

*என்கிறார். ஐம்பெருங்காப்பியங்களில் கலை வடிவத்துடன் 1.அகநிலை, 2. புறநிலைக் கட்டமைப்புக் கூறுகள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. இதனில் ''அறம் உணர்த்தல்' என்பது முதன்மை நோக்கமாகக் காணப்பட்டுள்ளதுடன் கலையின் வடிவத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

*1.விதியை வெல்லுதல், 2. ஊழ்வினையின் நிலைப்பாடு, 3. தர்மத்தை நிலைபெறச் செய்தல், 4. நிலையாமை தத்துவம், 5. அருளுடைமையின் கொள்கைகள், 6. மனிதநேயம் காத்தல் போன்றவைகளை வலியுறுத்தும் அறங்களைக் கொண்டதாகக் கலைக் கூத்துகள் மற்றும் எழுத்தியல் படைக்கப்பட்டுள்ளன.*

**கலைகளும் அறங்களும்**

*ஆடல், பாடல், இசை, நடிப்பு, ஒப்பனை, உரையாடல் இவைகளின் மூலமாக மக்களை மகிழ்விப்பதைச் சமூகப் பண்பாட்டுக்கு ஏற்ப பொருத்தியும், நுட்பமான அறச் சிந்தனைகளையும் வலியுறுத்துவதுடன் வாழ்வியலின் எதார்த்தங்களை எடுத்துக்காட்டுவதாகவும் கலைகளைத் தாங்கிய இலக்கிய வடிவங்களைப் பெற்றதாகவும் ஐம்பெருங்காப்பியங்கள் பாடப்பட்டுள்ளன. கலைகளானது சமூக நீதி ஆவணங்களின் தளங்களாக இருப்பதுடன் மட்டுமன்றி நீதிகளை நிலைநாட்டிடும் காட்சி மிகுந்த கவினுறுக் கவிதைகளாகவும் அமைந்துள்ளன.*

**" பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்**
**தெய்வம் தெளிமின் தெளிந்தோர்ப் பேணுமின்**
**பொய்யுரை அஞ்சுமின் புறஞ்சொல் போற்றுமின்**
**ஊன் ஊன் துறமின் உயர்க்கொலை நீங்குமின்**
**தானம் பல செய்யுமின் தவம் பல தாங்குமின்" *(மாணிக்கவாசகன், சிலம்பு, பா.வ. 186-190)***

*என்ற இளங்கோவடிகள் கூறும் அறமானது உலக மக்கள் அனைவருக்கும் பொருந்தக் கூடியதொரு ஒப்பற்ற அறமாகும். உலக மக்களின் நன்மைக் கருதி செய்யப்பட்ட சிறந்ததொரு ஒப்பரவு என்று இதனை இளங்கோவடிகள் கருதியிருக்கலாம். அதனால் தான் சமூகத்திற்குச் செய்யும் நன்மையானது அறம் சார்ந்தக் கருத்தியல்களை எடுத்துரைப்பது மட்டுமே என்ற சிறந்த நோக்கினொடு கலைகளின் வழி அறங்களை எடுத்துக்காட்டியுள்ளார்.*

**கலைவடிவமும் - இளங்கோவடிகளும்**

*கலைகளை நிகழ்த்துமிடத்தும் கலைச் சார்ந்தக் கருத்தியல்களைக் கூறுமிடத்தும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டாலும் அதனைக் கருத்தில் கொள்ளாது நல்வினையை மட்டுமே மக்கள் செய்ய வேண்டும் என்ற தலையாயக் கருத்தினுடன் உலகினில் அறத்தினை நிலை நாட்டிடுதல் வேண்டும் என்ற உலகளாவிய சிந்தனையைக் கொண்டு கலைகள்*

*தமிழிலக்கியங்களில் முன்வைக்கப்பட்டுள்ளன. கலைகள் வெளிப்படுத்தும் கருத்தியலில் சிறப்புமிக்கது அறம் உணர்த்துவதாகும். இதனை,*

***“ஒப்புரவினால் வருங்கே டெனின் அஃதொருவன்***

***விற்றுக்கோள் தக்க துடைத்து ” (குறள். 220)***

*என்று கூறுகின்றார். இதனை தான் இளங்கோவடிகள் உயர்ந்த சிந்தனைகளை உடைய அறங்களாக முன்வைக்கின்றனர். இதனை, கலை உலகப் படைப்பாளர்கள் கற்பனையுடன் கலந்து பாத்திரங்களின் வழி வெளிப்படுத்தப்படுகின்றனர். பிறரை துன்புறுத்தக் கூடிய மற்றும் வருத்தத்திற்கு ஆளாக்கக் கூடிய காரியங்களை செய்யாமல் விட்டுவிடுங்கள் என்ற அறிவுரையையும், இறைவனை நம்புங்கள் என்ற நம்பிக்கையையும், பெரியோரைப் போற்றுங்கள், அவர்களுக்கு மதிப்பளியுங்கள் என்ற மரியாதை என்னும் பண்பாட்டையும், பொய் சொல்லப் பயப்படுங்கள், புறம் பேசுவதைத் தவிருங்கள் என்ற கட்டளையையும், உயிர்கொலைப் புரியாதீர்கள், ஊன் உண்ணுவதைத் தவிருங்கள், என்று விலக்கி வைக்கக் கூடிய செயல்பாடுகளையும் தருமம் செய்யுங்கள், தவம்தனை மேற்கொள்ளுங்கள் என்ற வாழ்வியலில் மேற்கொள்ளக்கூடிய உலகளாவிய அறத்துடன் கூடிய கலைகளையும், தீய நட்பு, பொய்சாட்சிக் கூறுதல், பிறர் மனைவியை விரும்புதல், மது அருந்துதல், பயனிலாதச் சொற்கூறுதல் போன்ற அனைத்தையும் மறந்துவிடுங்கள் என்றும் இவ்வுலக வாழ்வானது நிலையற்றது. அதனால் வாழும் காலத்தின்போது மதிப்பு மிக்கதொரு அறம் சார்ந்த வாழ்வியலை வாழ்ந்துப் பாருங்கள் என்று இளங்கோவடிகள் முன் வைக்கும் கலைச் சிந்தனைகள் அனைத்தும் இப்புவியில் மனித இனம் வாழும் காலம் வரையும் பயன்படக்கூடிய அறம் தாங்கி நிற்கும் கலை வடிவக் கூறுகளாகும். இளங்கோவின் அறச்சிந்தனைகள் அனைத்தும் எழுத்துக்கலையுடன், இசைக்கலை மற்றும் நாடக கலையை இணைத்துக் கூறியுள்ளதின் வழி கலையின் சிறப்புத தன்மையைக் காணமுடிகிறது.*

***சிலப்பதிகாரத்தில் கலைகளின் வகைமை***

*சிலப்பதிகாரத்தில் பல்வேறு வகைப்பட்ட கலைக்கூறுகள் நிரம்பிக் காணப்படுகின்றன. இசையாசிரியனின் செயல்கள், கருவிகளின் செயல்பாடுகள், 11 வகையான ஆடல்கள் என்றனைத்தும் மக்களறம், வாழ்வயலறம், பொருளறம், அருளறம் என்ற பொருண்மைகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

***“அறச் செயல்களை இன்றே செய்க, நாளை செய்து கொள்ளலாம் என நினைத்தால் நாளை என்பது கேள்விக்குறியாக இன்றே உயிர் உடலை விட்டுப் பிரிந்தாலும் பிரிந்துவிடும்”***

***( மாணிக்கவாசகன், தெளிவுரை, சிலப்பதிகாரம், ப. 487)***

*என்ற வாழ்வியல் நிலைப்பாட்டுடன் நிலையில்லாத வாழ்வியலைப் பொருத்தி இளங்கோவடிகள் உரைத்துள்ளதாக உரைகளை வகுத்துள்ளார் ஞா. மாணிக்கவாசகன். மனதை இன்பத்துடன் தர்மம் செய்வதற்கு தூண்டுதலாக அமைவது கலைவடிவமாகும். எழுத்துக்கலை, பேச்சுக்கலை, சித்திரக்கலை, இசைக்கலை, நடனக்கலை, ஓவியக்கலை*

*என்பனவற்றில் எழுத்துக்கலையின் வடிவினதாக அறம் உணர்த்தப்பட்டுள்ளது. இதனை இளங்கோவடிகள்,*

***"பெருநல் வேள்வி நீ செயல் வேண்டும்***
***நாளை செய்குவம் அறம் எனின்***
***கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்***
***இது என விரைந்து வாழுநாள் உணர்ந்தோர்***
***முதுநீர் உலகில் முழுவதும் இல்லை" (சிலப்பதிகாரம், பா.வ.177-181)***

*என்று நடுகற்காதையில் பாடியிருப்பது உலக நிலையாமைத் தத்துவமாகும். அறம் செய்வதற்குரிய தன்மையையும், எக்காலத்திலும் அறத்தினைச் செய்து கொண்டு இருத்தல் வேண்டும் என்றும் அறம் செய்வதனை நிறுத்தல் கூடாது என்று மேன்மையான சிந்தனையை உலகம் யாவும் அறம்பெறல் வேண்டும் என்ற தலையாய நோக்கத்துடன் முன் வைத்துப் பாடியுள்ளதை அறியமுடிகின்றது. கலைகள் என்பது நுட்பமான தன்மை மற்றும் திறன்களை உள்ளடக்கியது ஆகும். கற்பனையுடன் கூடிய கலை நுட்பத்திறன் சேருமிடத்து நிகழ்வு கலைகளாகப் புனையப்பட்டு காட்சிப்படுத்துதல், அரங்கேற்றுதல், கைவினையில் கலைநயம் காட்டுதல் என்ற நிலைப்பாட்டுகளில் அமையப் பெறுகின்றன. அத்தகைய கலை அறத்தை இளங்கோவடிகள் வாழ்வியற் கலைக்கு உரியதாக்கிப் படைத்துக்காட்டியுள்ளமைச் சிறப்பிற்குரியதாகும். மேலும்,*

***"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு***
***இறையென்று வைக்கப்படும்" (குறள்.388)***

*அரசனுக்கு அரசியல் அறத்தை வள்ளுவம் முன்வைப்பது போன்று,*

***"குடிப்பொருள் அன்றுவம் செய்தி கொடித்தேர்***
***நும்மோ ரன்ன வேந்தர்க்கு***
***மெய்ம்மலி யுவகை செய்யுமிவ் விகலே" (புறம்.பா.வ.7-9)***

*புறநானூறும் மனித வாழ்வியலுக்குரிய அரசர்களுக்கான அரசியல் அறத்தைக் எழுத்தியல் கலையில் கூறுகின்றது. இதனையெல்லாம் விடுத்து இன்னும் ஒரு படி மேலே சென்று இளங்கோவடிகள் கலையாக "அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றமாகும்" என்பதை முன்னிறுத்தி,*

***"அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது***
***பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக்***
***கற்புச் சிறவாது என" (சிலப்பதிகாரம், பா.வ.201-209)***

*என்கின்றார். அரசியலின் அறமானது பிழையாகுமிடத்து பெருமை மிகுப் பெண்களின் கற்பு நிலையானது சிறப்பு அடையாமல் அழிவுடையதாக மாறும் என்று கூறியிருப்பதைக் காண முடிகின்றது. இக்கருத்து வாழ்வியற் கலைக்குத் தேவையான ஒன்றாகும். கவின்மிகுந்த நுட்பக்கலைகளைப் படைக்க விரும்பும் கலைஞர்கள் தமது கலைகளை வெளிப்படுத்துமிடத்து இதனை கருவாகக் கொண்டு படைத்திடும் போது கலைகள்*

*உயர்வானதாகவும், நடிப்பதற்கும், படிப்பதற்கும், ஏற்றார்போன்று படைக்கப்பட்டுள்ளன.*

***மணிமேகலையில் கலை உணர்வுகள்***

*கலையுணர்வுடன் அமைந்திட்டது காப்பிய இலக்கியங்களாகும். நம் அன்றாட வாழ்வியலின் செயல்பாடுகளைப் போன்று அமைந்திட்ட காப்பியக் கதைகளில் மனதை மகிழ்விக்கும் வருணனைகளும் அதீத கற்பனையின் வெளிப்பாடான மீவியற்கை கூறுகளும், கவலைகளைப் போக்கிடும் மனமகிழ்வு நிகழ்வுகளும் இணைந்திட்டதாகப் படைக்கப்பட்டுள்ளன. கலைக்களில் மணிமேகலை மெய்யியல் கலைவகைகளைச் சார்ந்தது ஆகும். மணிமேகலை காப்பியத்தின் முதன்மை நோக்கம் வாழ்வியலுக்கானக் கலைப் பொருண்மைகளை உணர்த்துவதாகும். கலைகள் நிகழ்கலைகள், 1. தொழிர் சார்ந்த கலைகள் 2. கட்புலக் கலைகள் 3. மெய்யியல் கலைகள் என்ற பிரிவுகளை உடையதாகும். ஏனைய உயிர்களிலிருந்து மனிதன் தனித்து நிற்பதற்குக் காரணம் கலையியல் உணர்வு ஆகும். கலைநுட்பத்திறன் ஒருங்கிணைந்து கற்பனையுடன் சேருமிடத்து அறக்கருத்துக்களை மையமிட்டு, வாழ்வியற் கலைக்கான மெய்யியல் கலைகள் படைக்கப்படுகின்றன.*

*மேற்கண்ட கூறுகள் அனைத்தும் இலக்கியத்தை செம்மைப்படுத்துவனவாக அமைந்துவிட்ட போதிலும், இலக்கியத்தின் ஆணிவேராகவும், பண்பாட்டுக் களஞ்சியத்தின் அடித்தளமாகவும் காணப்படுவது அதனில் இடம்பெற்றுள்ள அறச்சிந்தனைகளுடன் கூடிய மெய்யியல் கலைக்கூறுகளாகும். இதனை மணிமேகலையில் முழுவதுமாகக் காணமுடிகிறது. ஒழுக்கம் மற்றும் உயிரிரக்கம், அன்பு, நிலையாமைத் தத்துவம் என்றனைத்து மெய்யியலைக் கலையாகக் கூறுவதைக் காணமுடிகின்றது.*

***சீவகசிந்தாமணியில் கலைக் கூறுகள்***

*அகப்புறக் கட்டமைப்புக் கூறுகளின் அடிப்படையில் சிறந்ததொருக் காப்பியமாகக் காணப்படுவது சீவகசிந்தாமணி ஆகும். காப்பியத் தொடக்கத்தின் மணவாழ்வு முதல் இறுதி பக்கத்தின் நிலையாமை வரை இடம்பெறக் கூடியவை அறத்துடன் கூடிய கலைச்சிந்தனைகள் மட்டுமே ஆகும். "நிலையாமை" என்னும் வாழ்வியலைக் கலைகளின் வெளிப்பாட்டினில் சீவகசிந்தாமணி படைக்கப்பட்டுள்ளதுடன் அழகியல் கலைகளை முன்வைப்பதாக சீவகசிந்தாமணி படைக்கப்பட்டுள்ளது. சீவகசிந்தாமணியிலும் மணிமேகலையைப் போன்று வாழ்வியற் கலைகள், மெய்யியல் கலைகள், நிகழ்த்துக் கலைகள் என அனைத்தும் பயனுறக் கலைகளின் நோக்கினொடும் அழகியல் தன்மைச் சார்ந்தும் படைக்கப்பட்டுள்ளதைப் பார்க்க முடிகின்றது.*

***"வலிமை தான் வெல்லும் என்ற நியதியை மாற்றிட்டு அனைவரும்***
***வாழவேண்டும் எளிமையோரை வலியோர் வாட்டுவது ஒழிய வேண்டும்"***

*(பெ. ஜெபமேரி, சீவகசிந்தாமணியில் அழகியல், ப.185)*

*என்ற முத்தாய்ப்பான நிலையாமைத் தத்துவத்தின் தன்மையை எழுத்தியல் கலையின் மூலம் முன்வைக்கின்றது சீவகசிந்தாமணி.*

*பிணியின்றி வாழ்தல் எவ்வளவு முக்கியம் என்று மணிமேகலை கூறியது போன்று சீவகசிந்தாமணி பல மரபுசார்ந்த மக்களுடைய வாழ்வியலையும், திருமண முறைமையையும், வேற்றுமையில் என்ற தலையாயக் கொள்கை மற்றும் சமண சமயத்தின் நெறிகள், ஆகியவற்றை கற்பனைக் கலந்து நடிக்கும்படி சீவகசிந்தாமணி முன்வைக்கின்றன. சமய நம்பிக்கைகள், முற்பிறப்புக் கோட்பாடு போன்ற சிந்தனைகள் வலியுறுத்தப்பட்டுள்ளதுடன்,*

1. *இளமை, செல்வம், யாக்கை – இவற்றின் நிலையாமை என்னும் உண்மைகளையும்*
2. *ஊன் உண்ணாமை என்னும் சிறந்த அறத்தையும்*
3. *நல்ஞானம், நல்காட்சி, நல்அறிவு, நல்ஒழுக்கம், நல்பண்பு – என்ற தலையாய கொள்கைகளையும் சீவகசிந்தாமணியின் மூலம் வாழ்வியற் கலை நெறியாக முன் வைத்துள்ளார் திருத்தக்கதேவர். இவையனைத்தும் வாழ்வியற் கலைக்கான அனுபவச் சான்றுகளாகும்.*

***"உறுதிமுன் செய்தது இன்றி ஒழுகினேன் என்று நெஞ்சில்***
***மறுகல்நீ மற்றொரு ஆர்வம் விட்டிரு மரண அச்சத்து***
***இறுகல் நீ இறைவன் சொன்ன ஐம்பத அமிர்தமுண்டால்***
***பெறுதிநற் கதியை என்று***
***பெறுவை அகற்றினானே" (சீவகசிந்தாமணி, பா.எ.946)***

*பற்று என்பதை விட்டுவிட்டு இறப்பின் மீது அச்சம் கொள்ளாது, இறைவனை வேண்டி பக்தியில் மூழ்கிடும் போது, பெருந்துன்பமானது நீங்கிவிடும் என்ற நற்கதி அடையும் வழி மற்றும் நிலையாமையை சீவகசிந்தாமணி கூறுகின்றது. உலக மக்கள் அனைவரும் நிலையாமை தத்துவத்தை உணர்ந்து வாழ்வில் அருள் உள்ளம் மற்றும் கொடை உள்ளம் கொண்டவராக இயற்கையுடன் இணைந்திட்ட அன்பு வாழ்வியலை மேற்கொள்பவாரக இருத்தல் வேண்டும் என்ற சிறந்ததொரு அறக்கருத்தை அனைத்து இலம்பகத்தின் மூலம் முன்வைத்துள்ளார் திருத்தக்கதேவர். உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் முக்கியத்துவம் வாய்ந்த கவின்கலைகள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. கவின்கலைகள் என்பது அரங்கு ஆடல்கலைகள், எழுத்துக் கலைகள், கட்புலக் கலைகள் என்று மூன்று வகைப்பட்டதாகும். கட்புலக் கலைகளில் இனம், நடனம், நாடகம், சொற்பொழிவு, தற்காப்புக் கலைகளும், எழுத்துக் கலைகளில் கதை, கவிதை, நாடகம், கட்டுரை, ஆகியவைகள் இடம்பெறுகின்றன. இத்தகைய கலைகள் அனைத்தையும் சீவகசிந்தாமணியில் சிறப்புறக் காணப்படுகின்றன. கலைக்கூறுகள் அனைத்தும் படிப்பதற்கும், நடிப்பதற்கும் உரியன ஆகும்.*

**வளையாபதியும் கலையும்**

*சமண சமயக் கருத்துகளையும் வாழ்வியல் அன்பு நெறிகளையும் அறமாகக் கொண்டு படைக்கப்பட்ட கலையியல் வடிவம் கொண்ட அறநால் வளையாபதி ஆகும். இவை கி.பி. 9 ஆம் நுற்றாண்டைச் சார்ந்ததாகும். மனித நேயத்தை வற்புறுத்தும் அன்பு நெறி சிறந்தது என்றும் தவறு செய்பவன் அதற்கானத் தண்டனையை அனுபவிப்பதுடன், கற்பு நெறியில் சிறந்து விளங்கிடும் பெண்மைக்குத் துன்பம் தரக்கூடாது என்றும், உண்மை மட்டுமே நிலையானது, பொய்மை சிறப்பானது போன்று தோன்றினாலும் அழிவினைத் தரக்கூடியது போன்ற சிறந்தக் கருத்துக்களை முன்வைக்கின்றது வளையாபதி. மேலும் தமிழர் வாழ்வியலில் மதிப்புப் பெற்ற நிலையாமை மற்றும் மெய்யியல் கோட்பாடுகளை உணர்த்துகின்றது. பாவம், புண்ணியம் என்ற செயல் நன்மை, தீமைகளை அனைத்து மக்களுக்கும் உணர்த்தும் வண்ணம் அமைந்திட்ட எழுத்தியல் கலை நூல் வளையாபதி ஆகும்.*

***"வினையை வலியினாலே வேறு வேறு யாக்கையாகி,***
***நனிய தன்னா துன்புறுவும் நல்லுயிர்க்கு" (வளையாபதி, ப.66)***

*என்கிறது.*

***"நாடும் ஊரும் நனிபுகழ்ந்து ஏத்தலும்***
***பீடுறும் மழை பெய்க எனப் பெய்தலும்***
***கூடல் அற்றவர் நல்லது கூறுங்கால்" (வளையாபதி, ப.67)***

*வாழ்வியற்கலைக்கும், மெய்யியல் கலைக்கும் சிறந்த சான்றுகளை வளையாபதியில் காணமுடிகின்றது.*

**குண்டலகேசியும் கலைவடிவமும்**

*வாழ்க்கையின் குறிக்கோள் யாரையும் துன்புறுத்துவது இன்றி, உண்மைத் தன்மையுடன் அகமகிழ்ந்து வாழ்வது ஆகும். இதனை,*

***"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்***
***அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்***
***எல்லோரும் உவப்பது அன்றியும்***
***நல்லாற்றுப் படூஉம் நெறியும் ஆர் துவே" (புறம். ப. எ.195)***

*என்ற வாழ்வியலின் மூலமே உணர்த்துகின்றது புறநானூறு. அத்தகைய இனிமையான வாழ்வியலில் துன்பமான முடிவைத் தருவதாக இருந்து சூழலியல் தன்மைக்கு ஏற்ப மாற்றி எழுதப்பட்ட காப்பியம் குண்டலகேசி ஆகும். இதனில் தூய மனத்தின் நிலைபாடு, பற்றற்ற வாழ்க்கை, நிலையாமை தத்துவம், இரக்கமில்லாத மன உணர்வு, ஊன் உடம்பின் இழிவு, அன்புக் காட்டுதல் என்ற பல நிலைப்பாடுகளை கலைநயத்துடன் வாழ்வியற் கலைக்கூறுகளாக நாதகுத்தனார் வெளிப்படுத்தியுள்ளார்.*

***" வாயுவினை நோக்கி வா மாண்டவய நாவாய்***
***ஆயுவினை நோக்கி உள வாழ்க்கை அதுவே போல்***

***தீயவினை நோக்கும் இயர்சிந்தனையும் இல்லாத***

***தூயவினை நோக்கி உள துப்புரவு எல்லாம்" (குண்டலகேசி, ப.எ. 103)***

*என்று சிறந்ததொரு மெய்யியல் கலையை முன்வைக்கின்றது குண்டலகேசி.*

***" இசையும் ஈதலும் மூன்றும்***

***அசைவுடன் அரும்புணர்வு இனமென***

***வினைவயின் பிரிந்த வேறுபடு கொள்கை" (நற்றிணை, ப.எ.214)***

*என்று நற்றிணை பகர்வது போன்று வாழ்வியல் நெறிகளைச் செம்மையாக்கிக் கொள்பவர்கள் தமது சிந்தனைத் திறத்தால் மேம்பட்டு நிற்கின்றனர். குண்டலகேசியில் சூழலியல் நிகழ்வுக்கு ஏற்ற சமயோசித அறிவு என்பது இன்றியமையாததாக இருப்பதுடன் அவை கலையியல் சார்ந்தச் செய்கைகளை உடையதாக அமைதல் வேண்டும் என்று உரைக்கின்றது. குண்டலகேசிப் பாடல்களில் வாழ்வியற்கலை மற்றும் மெய்யியல் கலை வடிவங்களை எழுத்துக்கலையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது.*

**முடிவுரை**

*பண்டையத் தமிழ் மக்கள் கலைத்தன்மையுடன் வாழ்ந்தது மட்டுமின்றி, அறத்தை நிலைநாட்டிடும் செயல்களையும், கலைதான் சிறந்தது என்றும் வலியுறுத்திச் சென்றுள்ளதை ஐம்பெருங்காப்பியங்களின் மூலம் அறிய முடிகின்றது. வாழ்க்கைக்கானப் புரிதல், மனித இனத்தின் செயல்பாட்டு நிலைகள், வாழ்வில் மாற்றத்திற்குரியன என்ற அனைத்தையும் இவ்வாய்வு கலை நிலைப்பாட்டின் படி திறம்பட எடுத்துரைக்கின்றது. அரசியலில் பிழை, பத்தினித் தன்மையின் சிறப்பு, தவறுக்குத் தண்டனை என்பதைச் சிலம்பும், கற்பு ஒழுக்கம், துறவு நெறியின் சிறப்பு, தவ வாழ்க்கை ஒழுக்கம், பண்பாடு காத்தல் என்னும் அறம் ஆகியவை மணிமேகலையின் மூலமும், எட்டுப் பெண்களை மணமுடித்து இல்லற சுகமிக்க வாழ்க்கை வாழ்ந்திட்டாலும், நிலையாமை மட்டுமே நிலைத்து நிற்கக் கூடியது என்பதை சீவகசிந்தாமணியும், மனித வாழ்வில் உண்மைத் தன்மைக்குரியச் சிறப்பு, இறையருள், நிலையாமை போன்ற பண்பட்ட வாழ்வியலின் கலை சார்ந்த கருத்துக்களை வளையாபதியும் எடுத்துரைக்கின்றது. இவ்வாய்வின் மூலம் ஐம்பெருங்காப்பியங்களின் கதை வடிவம் மற்றும் கலை வடிவத்தில் அறக்கருத்துக்கள் மேலோங்கி இருப்பதைக் காண முடிவதுடன் இதனை உலக மக்கள் அனைவரும் பின்பற்றி ஒழுகினால் உலகினில் அன்பும், அமைதியும் மகிழ்ச்சியுடன் கூடிய வாழ்வியலும் நிலைபெற்று இருக்கும் என்பது உறுதியாகும். கலைகளின் வெளிப்பாட்டு நிலைப்பாடாக ஐம்பெருங்காப்பியங்கள் அமைந்துள்ளன.*

**துணை நூற்பட்டியல்**

1. *மாணிக்கவாசகன். ஞா (உ.ஆ.), சிலப்பதிகாரம், உமா பதிப்பகம், சென்னை -01, ஐந்தாம் பதிப்பு. 2005*
2. *பாலசுப்ரமணியன். கு.வெ (உ.ஆ.), மணிமேகலை, உமா பதிப்பகம், சென்னை -01, ஆறாம் பதிப்பு, 2010*

3. பாலசுப்ரமணியன். கு.வெ (உ.ஆ.), புறநானூறு, நியு செஞ்சிரி புக் ஹவுஸ் பி.லிட்., அம்பத்தூர், சென்னை, முதற்பதிப்பு, ஏப்ரல் 2004
4. ஆச்சார்யா பி.எஸ். (உ.ஆ.) திருக்குறள், நர்மதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2010
5. மாணிக்கவாசகன் ஞா. (தெ.உ.), சீவகசிந்தாமணி, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை.
6. மாணிக்கவாசகன் ஞா. (உ.ஆ.), வளையாபதி குண்டலகேசி, உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை-01, ஆறாம் பதிப்பு 2010
7. செம்மொழித் தமிழ் பன்னாட்டு பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ், ராஜா பப்ளிகேசன்ஸ், திருச்சி, சிறப்பிதழ் நவம்பர், 2019